ஏப்ரல் 2017

அன்புக்குரிய பெற்றோரே/பாதுகாவலர்களே:

எங்களுடைய பெற்றோரும் பாதுகாவலர்களுமே கல்வியில் எமது பலம்வாய்ந்த பங்காளிகளாகக் காணப்படுவதால் உங்கள் கருத்துகளை நாம் அறிய விரும்புகின்றோம். மே 1 முதல் மே 19, 2017 இற்கிடையேயான காலத்தில் கருத்தாய்வொன்றைப் பூர்த்திசெய்யுமாறு York Region District School Board எல்லா பெற்றோரையும் பாதுகாவலர்களையும் அழைக்கின்றது. பெற்றோர்/பாதுகாவலரின் கருத்துகளை அறிவதற்கு இது ஒரு முக்கிய வாய்ப்பாக அமைவதுடன், இக்கருத்தாய்வின் முடிவுகள் மாணவர்களின் அடைவுகளுக்கும் நல்வாழ்க்கைக்கும் ஆதரவளிப்பதற்கு பயன்படுத்தப்படும்.

இக்கருத்தாய்வு Board Improvement Plan இன் முன்னுரிமைகளை நோக்கத்திற் கொண்டுள்ளது; மேலும், பாடசாலைக் கற்றல் சூழல்கள், கணிதம், மாணவரின் மனநலன் மற்றும் ஆரோக்கியம், சமத்துவம் மற்றும் உள்ளடங்கல், மற்றும் அக்கறைமிக்க பாதுகாப்பான பாடசாலைகள் என்பவற்றைக் குறித்த கேள்விகளை அது உள்ளடக்குகின்றது. இக்கருத்தாய்வு Ontario Education Act இற்கிணங்க உருவாக்கப்பட்டுள்ளது; அத்துடன், பாடசாலைச் சூழல்களைப் பற்றி கருத்தாய்வுகளை நடத்தவேண்டும் என்ற கல்வி அமைச்சின் உரிமைக்கட்டளையையும் நிறைவேற்றுகின்றது.

இக்கருத்தாய்வைப் பூர்த்திசெய்வதற்கு சுமார் 15 நிமிடங்கள் தேவைப்படும். இதன் ஆங்கில வடிவம் இணையத்தில் பின்வரும் முகவரியில் அணுகத்தக்கதாகவுள்ளது: https://www.surveymonkey.com/r/yrdsb2017ParentSurvey. காகிதப் பிரதிகள் English, Simplified Chinese, Traditional Chinese, Farsi, Gujarati, Hebrew, Korean, Punjabi, Russian, Sri Lankan Tamil, Urdu மற்றும் Vietnamese ஆகிய மொழிகளில் கிடைக்கப்பெறும். **காகித வினாப்பட்டியல்களைக் கோருவதற்கு தயவுசெய்து பாடசாலையுடன் தொடர்புகொள்ளுங்கள்.** நீங்கள் காகிதப்பிரதிகளில் கருத்தாய்வைப் பூர்த்திசெய்ய தெரிவுசெய்தால், தயவுசெய்து அதை வழங்கப்பட்டுள்ள கடிதவுறையில் பாடசாலைக்கு மீளனுப்புங்கள்.

பெற்றோர்/பாதுகாவலரின் கருத்துகளுக்கு நாம் மதிப்புகொடுக்கின்றோம்; மே 19 இற்கு முன்னர் இக்கருத்தாய்வை பூர்த்திசெய்யுமாறு நாம் உங்களை ஊக்குகின்றோம். நீங்கள் வழங்கும் தகவல்கள் அநாமதேயமாகவும், நம்பகமான முறையிலும், பொருந்தும் எல்லா சட்டங்களிற்கு அமையவும் பாதுகாக்கப்படும். ஒவ்வொரு பிள்ளைக்கும் நீங்கள் தனித்தனியே கருத்தாய்வுகளைப் பூர்த்திசெய்யலாம்.

இக்கருத்தாய்வின் முடிவுகளை வரும் இலையுதிர்க்காலத்தின் பிற்பகுதியில் உங்கள் பாடசாலையின் அதிபரிடமிருந்து நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் எழுந்தால் தயவுசெய்து பாடசாலையுடன் தொடர்புகொள்ளுங்கள். உங்கள் ஆதரவுக்கு நன்றி.

உண்மையாக,

Alex Corry, Principal